செ.வெ.எண் : 46 நாள் : 21.11.2026

நாகப்பட்டினம் மாவட்டத்தில் முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் பணிபுரிவதற்கு செவிலியர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சியர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

மாவட்ட நலவாழ்வு சங்கம், நாகப்பட்டினம் சுகாதார மாவட்டத்தில் அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புதியதாக உருவாகக்கம் செய்யப்பட்டுள்ள முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் பணிபுரிவதற்கு செவிலியர் (Staff Nurse) பணியிடங்களுக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நாகப்பட்டினம் மாவட்ட நலவாழ்வு சங்க அலுவலகத்தில் 04.12.2026 அன்று மாலை 5 மணிக்குள் வரவேற்கப்படுகின்றது.

அரசு மருத்துவ கல்லூரி மற்றும் தலைமை அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள 13 பணியிடங்களுக்கு, ஒப்பந்த தற்காலிக /செவிலியர்கள் (Staff Nurse) பதவிக்கு, 50 வயதிற்குட்பட்ட, செவிலியர் பட்டய படிப்பு (GNM) அல்லது இளங்களை செவிலியர் பட்டம் (BSC. Nursing)- அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் செவிலியர் கல்லூரி- இந்திய செவிலியர் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு நர்விங் கவுன்சில் பதிவு கட்டாயம் பணிக்கு தேவையான தமிழ்மொழி புலமை கட்டாயம் பெற்ற நபர்கள் விண்ணப்பிக்கலாம்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி, நிர்வாக செயலாளர் / மாவட்ட சுகாதார அலுவலர், மாவட்ட நலவாழ்வு சங்கம். நாகப்பட்டினம்

குறிப்பு : 1. விண்ணப்பங்கள் நேரிலோ/ விரைவு தபால் (Speed Post) மூலமாகவோ வரவேற்க்ப்படுகின்றன. 2. விண்ணப்ப படிவங்கள் nagapattinam.nic.in என்ற வலைதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தகுந்த ஆவண நகல்களுடன் மேலே குறிப்பிட்ட மாவட்ட நலவாழ்வு சங்க அலுவலகத்திற்கு 04.12.2026 அன்று மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.